# தோரணம்
# Thoranam

நன்றே செய்! இன்றே செய்!!

SMS(UK)Today | மாத e – செய்தி ஏடு | Monthly e-Newsletter

ஓலை - 1 | கார்த்திகை— 2016 | தோரணம் -10






ஆசிரியர் - வை.சிவனருட்செல்வர்

வடிவமைப்பு - சோ.நிரஞ்சன்

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

# Saiva Munnetta Sangam (UK)

***"Community Service Through Saiva (Hindu) Concern"***

Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel / Fax: 020 8514 4732    Fax: 01268 561805

www.saivamunnettasangam.com    smsukinfo@gmail.com

**Registered Charity No: 292085**

## எமது சேவைகள்

அருள்மிகு சிதம்பரேஸ்வர ஆலயம்
கலசம் காலாண்டிதழ்
தோரணம் மாதாந்த மின்னிதழ்
நால்வர் தமிழ்ப் பாடசாலை

நால்வர் முத்தோர் நியைம்
யோகா நிலையம்

சைவ சமயப் பரீட்சைகள்
கலை வகுப்புகள்
நால்வர் கோட்டம்
இறுதிக் கிரியைகள்

## யோகர்சுவாமிகளின் மாதாந்த நினைவு தினம் - 2016

யோகர் சுவாமிகளின் பிறந்த தின நட்சத்திரமான ஆயிலியம் பின்வரும் மாதாந்த தினங்களில் எமது ஆலயத்தில் அவரது நினைவு தினம் அனுஷ்டிக்கப்படும் என்பதை அவரது அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.



20-11-2016 - ஞாயிறு ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு
17-12-2016 - சனி ஆயிலிய நட்சத்திர தினம் - மாலை 6.00 மணிக்கு


## பெரிய புராணம் (சொற்பொழிவுகள்)

***சைவ முன்னேற்றச் சங்கம் கடந்த 05-06-2016 அன்று தொடக்கம் எமது அருள்மிகு சிவகாமி அம்பாள் சமேதர சிதம்பரேஸ்வரர் ஆலயத்தில் ஒவ்வொரு வார வெள்ளிக்கிழமை தோறும் மாலை 8.00 மணியளவில் நடைபெறும் பெரியபுராணச் சொற்பொழிவுகளை (ஒளிப் பதிவு செய்யப்பட்ட) இந்த இதழ்மூலம் தொடர்ந்து வாசகர்கள் கேட்டு அறிவதற்கு தர இருக்கிறோம். கீழேயுள்ள U-tube ஐ அழுத்துவதன்மூலம் கேட்கலாம்***



ஆனாய நாயனார்
காண்பவை யாவும் சிவமே ஆன நிலையில்
வழிபட்ட சிறப்பு
(திரு வன்னியசிங்கம் பவகரன்)

YouTube



முருக நாயனார்
வாச மலர் கொண்டு திருவைந்தெழுத்து ஓதித் துதித்தவர் பெருமை
திருமதி பிரதிபா பஞ்சரட்ணம்

YouTube

அன்புடையீர்,


## பெரியபுராணத் தொடர் விரிவுரை

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனாக்கு அடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டர்க்கு அடியேன்
அலலிமென முல்லையந்தார் அமர்நீதிக்கு அடியேன்
ஆருரன்ஆரூரில்அம்மானுக்குஆளே!

– சுந்தரரின திருத்தொண்டர் தொகை 1ம் பாடல்

.திருத்தொண்டர் புராணம் எனப்படும் பெருமைமிக்க சிவனடியார்களின் சிறப்பைச் சொல்லும் பெரியபுராணத் தொடர் சொற்பொழிவு மீண்டும் எங்கள் ஆலயத்தில் இடம்பெற சிவபெருமான் திருவருள் கிட்டியுள்ளது. சென்ற ஆண்டுகளில் ஐந்து முறை இடம்பெற்று பெரும் வரவேற்பைப் பெற்ற இந்தப் பக்திமிக்கத் திருப்பணியில் சிவனடியார்களின் பெருமைகளை எடுத்துச் சொல்லியும், கேட்டும் அருள் பெறுமாறு உங்களைப் பணிவாக அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| 25-11-2016<br>வெள்ளிக்கிழமை | திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்<br>வேதநெறி சிறக்கத் தமிழ்மாலை தந்த ஞானக்குழந்தையின் சிறப்பு | சிவஸ்ரீ முத்துக்குமாரசாமி குருககள் |
| 02-12-2016<br>வெள்ளிக்கிழமை | ஏயர்கோன் கலிக்காம நாயனார்<br>சிவனாரைத் தூதனுப்பியதால் சுந்தரரைப் பகைத்தவர் வரலாறு | திரு.<br>வை. சிவனருட்செல்வர் |
| 09-12-2016<br>வெள்ளிக்கிழமை | திருமூல நாயனார்<br>திருமந்திரமாலை தந்த சிவயோகியாரின் சீலம் | திரு.<br>சு.யோ.பற்றிமாகரன் |
| 16-12-2016<br>வெள்ளிக்கிழமை | தண்டியடிகள் நாயனார்<br>புறத்தே கண்ணொளி இன்றித் திருக்குளத்தே திருப்பணி செய்த செம்மை | திரு.<br>க. சிவகுருநாதபிள்ளை |
| 23-12-2016<br>வெள்ளிக்கிழமை | மூர்க்க நாயனார்<br>அடியார்க்கு அமுதிட்டு நற்சூதர் என்று நிலவியவர் மகிமை | திரு.<br>கந்தையா கேதீஸ்வரன் |



# ஆலய சங்க நிகழ்வுகள்

## கார்த்திகை மாதம் 2016

| | | |
|---|---|---|
| 21-11-2016 | திங்கள் | ஆறுமுக நாவலர் குருபூசை |
| 26-11-2016 | சனி | 40வது மகாசபைக் கூட்டம் |
| 13-12-2016 | செவ்வாய் | திருக்கார்த்திகை விரதம் |
| 14-12-2016 | புதன் | விநாயக விரதம் ஆரம்பம |
| 18-12-2016 | ஞாயிறு | யோகா நிலையம் - பாபாஜி குருபூசை |



### இன்னிசை நிகழ்ச்சி

சென்ற மாதம் சங்க ஆலயத்தில் நடைபெற்ற நவராத்திரி விழாவின்போது நடைபெற்றி இன்னிசை நிகழ்ச்சிகளின் தொகுப்பை U-tube அழுத்துவதன் மூலம் பார்க்கலாம்

# சைவ முன்னேற்றச் சங்கம்

## மகாசபைக் கூட்டம்

**இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தின் 40 ஆவது மகாசபைக் கூட்டம் எதிர்வரும் 26-11-2016 சனிக்கிழமை அன்று சங்க மண்டபத்தில் நடைபெறும்**

**சகல அங்கத்தவர்களையும்**

**மகாசபைக்கூட்டத்தில் பங்குபற்றுமாறு அன்புடன கேட்டுக்கொள்கிறோம்**

**கூட்டம் பகல் 12.00 மணியளவில் மதிய போசனத்தின் பின் ஆரம்பமாகும்**

# PASU DHARMA

Enlightenment Circle

Saiva Munnetta Sangam

## Our Reach Project INDIA— October 2016

**Supporting the Survival of orphaned Cows & Bulls in their old age.**

Enlightenment Circle team members have decided to provide financial help towards medical & essential food items to the animals at the **Indian Institute of Animal Welfare (IIAW)** for a year in order to overwith same commitment and enthusiasm. Currently the organization has 600 elderly cows/bulls of which 100 of them are disabled. Dr Sadhana has utilized all her personal assets. However, she continues her service with the help of well-wishers.





Dr. Sadhana Rao initiated this charity **IIAW** in south India 42 years ago to help 20 orphaned & elderly cows. Now she is 72years of age and continuing to look after the animals

**IIAW is suffering from acute shortage of funds at present to support the basic needs of the animals.**

How do these animals arrive here?

1) Poverty-ridden farmers abandon their cows when they stop producing milk or cannot maintain them anymore.

**SPECIAL PROJECT NEWS**

Email—smsukyoga@gmail.com or Mobile No. 07730 313379

2) Dr Sadhana also looks after animals who met with accident by speeding vehicles.

3) Cows gifted to temples are left here during their old age without any monetary compensation

4) Cancer-stricken and paralyzed ones are brought here for treat-





5) Cows meant for Kerala slaughter houses are seized and brought here by activists and police force.

These animals are located at Venkatapuram (70km from Chennai) in Thiruvallur district.



This was handed over to the head of IIAW, Dr Sadhana Rao by Mrs. G Sivakurunatha Pillai from London & Ms. M Kanagalakshmi from Chennai

**IIAW is suffering from acute shortage of funds at present to support the basic needs of the animals.**

**We call this initiative as**

# "PASU DHARMA"





**SPECIAL PROJECT NEWS**

Email—smsukyoga@gmail.com or Mobile No. 07730 313379







TIN. No. : 33290860031
Area Code : 044
SRI RAMAJAYAM
T.S. PANDIAN STO
No. 17, Sringeri Mutt Road, Ramakrishna Nagar, R.A. Puram, Chenn
Bill No. 696
CREDIT BILL
To INDIAN INSTT OF ANIMAL WELFARE - NEEL
CHENNAI-115, TAMILNADU

| S. No. | PARTICULARS | QUANTITY |
|---|---|---|
| 1 | பருத்தி புண்ணாக்கு - 50 கிலோ | 1 Nos |
| 2 | இலை தவிடு - 35 கிலோ | 5 Nos |
| 3 | நைஸ் தவிடு - 50 கிலோ | 1 Nos |
| 4 | உளுந்த மாவு - 50 கிலோ | 1 Nos |
| 5 | கடலை பொட்டு - 20 கிலோ | 4 Nos |

TSP
E. & O.E.
Non Taxable Goods
Delivery
Rupees Nine Thousand Five HundredOnly
Goods once sold cannot be taken back or exchanged. Subject to Chennai Jurisdiction.





**During the month of October'16 we provided the following food items in addition to medication**

| Items | Qt(Kg) | Qt | |
|---|---|---|---|
| 1 | Cotton Seed Cakes | 50 | (1 Bag) |
| 2 | Wheat Bran Flakes | 175 | (5 Bags) |
| 3 | Wheat Bran Rice | 50 | (1 Bag) |
| 4 | Urid Dhal dust | 50 | (1 Bag) |
| 5 | Fried Gram dust | 80 | (4 Bags) |
| Total | | 405 | |




Graphical representation of financial contribution towards the cost of medication & essential food items for approx. number of animals during the period by EC at IIAW.

We kindly request you to support this invaluable cause for at least one animal per family for a year.

**Our Bank Details:**

**LLOYDS BANK PLC, WICKFORD BR**

**A/C-01610090 ;SORT CODE 30-90-80**




| | Sep'16 | Oct'16 |
|---|---|---|
| Feeds | 0 | 240 |
| Medicine | 250 | 250 |

**SPECIAL PROJECT NEWS**

Email—smsukyoga@gmail.com or Mobile No. 07730 313379



**They thank you for all your help….**

**Please feel free to contact us for any further details.**

**"HOW deeply you touch another life is**

**How rich your life is…."**

**- Sadhguru Vasudev**

Our special thanks to:

Universal Kriya Babaji Yoga Sangam

Saiva Munnetta Sangam (UK)

Enlightenment Circle

Mr. V R Ramanathan family

Mr. R Kulendrarajah family

Mr. K Jegatheeswarampillai family

Mrs. B Mohan Gandhi family

Dr M Shieamsundaran family

Mr. S Atputhananthan family

Mr. S Raghavan family

Our sincere thanks to Ms. M Kanagalakshmi from Chennai for providing invaluable help by coordinating activities very methodically on the ground.

## மூத்தோர் நிலையத்தின் சில பணிகள்



## Sewing Project in Jaffna

### தையல் பயிற்சித் திட்டம் - யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் பெண்களுக்கான தையல் பயிற்சித் திட்டத்திற்கு எமது மூத்தோர் நிலையம் சார்பாக £ 750.00 பவுண்கள் நிதி சேகரிக்கப்பட்டு எமது சை.மு.சங்கத்தின் பிரிவான யோகா நிலையத்தாரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.

இந்நிதிப் பங்களிப்பில் பங்களித்தவர்களின் பெயர்கள் -

திருமதி. செல்வமணி பஞ்சலிங்கம், திருமதி. மனோன்மணி குணரட்னம்,

திருமதி. சிவகாமி நடராஜா, திருமதி. நளாயினி ஸ்கந்தமூர்த்தி,

திருமதி. விஜி கனகேந்திரம்,திருமதி. இரட்னேஸ்வரி நவரட்னம்.,

திருமதி. சுசீலா கனகலிங்கம், திருமதி பத்மா சர்வானந்தன்

திருமதி. சிவஞானவதி கந்தப்பு, திருமதி. இராசமணி மார்க்கண்டு.

திருமதி. இந்திரா குணசிங்கம்.,திருமதி இராணிமலர் விஸ்வநாதபிள்ளை.

திருமதி. தவம் செல்லத்துரை, திருமதி. சாவித்திரி ஆனந்தன்

திருமதி. துரையம்மா துரைராஜா,. திருமதி. சிறீ பொன்னுத்துரை,

திருமதி. பத்மா குகதாசன், திரு. என். சுரேஸ், திருமதி. புவனேஸ்வரி சபாரட்னம

## கேதாரகௌரி விரதம்

கேதாரகௌரி விரதத்தின் கடைசிநாளான 30-10-2016 அன்று சைவ முன்னேற்றச் சகங்கத்தின் சிவகாமி சமேதர ஶ்ரீ சிதம்பரேஸ்வர ஆலயத்தில் நடைபெற்ற கௌரி வரத வழிபாட்டு நிகழ்ச்சியின் ஒளிப்பதிவை U-tube அழுத்துவதன்மூலம் பார்க்கலாம்

# ஆதிசிவன் மைந்தனே வாழ்க வாழ்கவே!!



ஆதிசிவன் மைந்தனே அருள் தந்து வாழ்க!
அழகுதமிழ் முருகனே அறிவு தந்து வாழ்க!
சரவணப்பொய்கையில் சனித்தவனே வாழ்க!
கார்த்திகைப் பெண்டிரால் வளர்ந்தவனே வாழ்க!
அன்னை சக்தி அரவணைப்பில் பிணைந்தவனே வாழ்க!
அறுமுகமும் ஒருமுகமாய் அமைந்தவனே வாழ்க
வாழ்கவே!!

அவ்வையுடன் அழகு தமிழில் பழகியவனே வாழ்க!
அறுபடைவீட்டில் அமர்ந்திருப்பவனே வாழ்க!
அவனியெலாம் மயில்மீது வலம்வருபவனே வாழ்க!
அப்பனிடம் பழம் பெற அடம்பிடித்தவனே வாழ்க!
பிரமனைச் சிறைப்பிடித்த வடிவேலவனே வாழ்க!
பிதாவிற்கே பிரணவம் புரியவைத்தவனே வாழ்க
வாழ்கவே!!

சூரனை சம்காரம் செய்தவனே வாழ்க!
மாமுகத்தான் பின்னவனே எமக்குதவி வாழ்க!
மயிலேறி மயல் போக்கும் மயில்வாகனனே வாழ்க!
மங்கையர்கள் வேண்டும் வரம் வழங்கிடுவோனே வாழ்க!
யாமிருக்கப் பயமேனென தஞ்சம் தருபவனே வாழ்க!
யாவும் துறந்து பழனிமலையில் இருப்பவனே வாழ்க
வாழ்கவே!!

இமயத்தில் இல்வாழ்வு இயற்றுபவனே வாழ்க!
இந்திரன் மகளை இடப்பாகம் கொண்டவனே வாழ்க!
வள்ளிக்குறத்தியை மயக்கி மணந்தவனே வாழ்க!
வருந்தியுனை அழைத்தால் வருகை தருபவனே வாழ்க!
அடியார்கள் குறைதீர்க்கும் சேவற்கொடியோனே வாழ்க!
கந்தா! கடம்பா! கதிரேசா!! குமரா!! வெனப்படுபவனே வாழ்க வாழ்கவே!!

-வை.சிவனருட்செல்வர்

வேலுண்டு வினையில்லை
மயிலுண்டு பயமில்லை
குகனுண்டு குறையில்லை.

“மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்”

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

***“Community Service Through Saiva (Hindu )Concern”***

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.

Tel : 020 8514 4732

**Registered Charity No: 292085**

**2016**

**திருக்கோணமலை மாவட்டம் சம்பூரில் போர்க்காலத்தின்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க 18 மலசல கூடங்கள் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கத்தினரால் கட்டிக் கொடுக்கப்பட்டது.**

# Rs. 500000/=













அறத்தான் வருவதே இன்பம்
Virtue Gives True Delight

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"
சைவ முன்னேற்றச் சங்கம் (UK)
Saiva Munnetta Sangam (UK)
"Community Service Through Saiva (Hindu) Concern"


2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel: +44 (0)20 8514 4732
Registered Charity No: 292085
www.saivamunnettasangam.com E.mail: smsukinfo@gmail.com

## வெளிநாட்டுத்துறையின் சில பணிகள்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேசத்தில் வாழும் வசதி குறைந்த 36 மாணவர்களுக்கு கடந்த ஆனி மாதம் தொடக்கம் 6 மாதங்களுக்கு இலவசமாக கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்கள் க.பொ.த சா.த பரீட்சைக்கு தயாராவதற்கு போதிக்கப்படுகின்றது. இத்திட்டம் சைவ முன்னேற்றச்சங்கத்தின் முற்றுமுழுதான பங்களிப்புடன் நடாத்தபப்டுகின்றது.

**ரூபா 1.35,000.00**

இத்திட்டம் மருதங்கேணி பிரதேச செயலாளரினது அனுசரணையுடன் செயற்படுத்தப்படுகிறது.



இலவச மாலை நேர வகுப்புக்கள்

உடுத்துறை பாரதி சனசமூக நிலையத்தினால் லண்டன் சைவ முன்னேற்ற கழகத்தின் நிதி அனுசரணையுடன் மாணவர்களுக்கான வகுப்புக்கள் நடைபெறவுள்ளன.

- தரம்-09,தரம்-10,தரம்-11 மாணவர்களுக்காக
- பாடங்கள் -கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்.
- நேரம் - 3.00 பி.ப
- இடம் - யா/உடுத்துறை மகா வித்தியாலயம்.

அனைத்து பிரதேச மாணவர்களையும் இவ் வகுப்புக்களில் கலந்து பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பாரதி சனசமூக நிலையம்
உடுத்துறை







அறத்தான் வருவதே இன்பம்
Virtue Gives True Delight

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

## Saiva Munnetta Sangam (UK)

"Community Service Through Saiva (Hindu) Concern"

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel: +44 (0)20 8514 4732
Registered Charity No: 292085
www.saivamunnettasangam.com E.mail: smsukinfo@gmail.com

## வெளிநாட்டுத்துறையின் சில பணிகள்

கிழக்கு மாகாணத்திலுள்ள நிந்தாவூரில் இஸ்லாமிய கிராமங்களினால் சூழப்பட்டுள்ள சேனைக்குடியிருப்பு, என்ற ஒரு தமிழ் கிராமத்தில் ஒரு மரத்தின் கீழ் நடக்கும் ஒரு அறவழிப் பாடசாலை. அங்கு படிக்கும் மாணவர்களுக்கு படிப்பதற்கு கட்டிடமோ தளபாடங்களோ எதுவும் இல்லை. அங்கு கல்வி கயிலும் மாணவர்களின் நலன் கருதி அவர்களுக்கு ஒரு வகுப்பறைக்கட்டிடம் அமைத்துத் தருமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க எமது வெளிநாட்டுத்துறைப் பிரிவினரால் ஒரு கட்டிடம் கட்டி கொடுக்கப்படுகின்றது. இதற்குரிய பணம்

செலவிடப்பட்டுள்ளது.

**இலங்கை ரூபாவில்**
**Rs.6,00,000.00**


சிவநெறி அறப்பணி மன்றம்
SIVANERY ARAPPANI MANDRAM
திருநீலகண்டர் கட்டிடம், சேனைக்குடியிருப்பு, கல்முனை
Thiruneelakander Building, Chenai Kudiyiruppu, Kalmunai
Reg. No. :- HA/04/AM/104
Email Ad :- sivanerisrilanka@gmail.com A/C No :- 78242524 (Bank of Ceyelon Kalmunai)

தலைவர்
யோ.கஜேந்திரா
0771050007

செயலாளர்
லோ.சரவணபவன்
0774687550

பொருளாளர்
செ.செல்வக்குமரன்
0752539852

27.07.2016

திரு.S.பாலசிங்கம்
சைவமுன்னேற்ற சங்கம்,
இங்கிலாந்து.

கனம் ஐயா,

மிகுதி கட்டிடத்திற்கான உதவி கோரல்.

தங்களால் வழங்கப்பட்ட நிதியில் அறநெறிப்பாடசாலை கூரை மட்டம் வரை கட்டியுள்ளோம். அதற்கு முதற்கண் நன்றியினைத் தெரிவிக்கிறோம். மேலும் இக்கட்டிடத்தின் மிகுதி வேலைகளான
மேற் கூரை (சீற்) போடுதல்.
கட்டிடத்தை சுற்றிவர பூசுதல்
கதவு
யன்னல் (நெற்கம்பி)
மின்வேலைப்பாடுகள் (மின்குமிழ், மின்விசிறி)

போன்ற வேலைகளை செய்ய சுமார் ரூபா 300,000.00 தேவைப்படுகிறது. இந் நிதியினை மனம் உவந்து தந்து உதவினால் மிகப் பெரிய உதவியாக இருக்கும். இத்தோடு இதுவரை கட்டிய கட்டிட செலவு விபரம், படங்கள் இணைத்துள்ளோம்.

நன்றி.

தலைவர்
யோ.கஜேந்திரா
சிவநெறி அறப்பணிமன்றம்

பொருளாளர்
செ.செல்வக்குமரன்
சிவநெறி அறப்பணிமன்றம்

தலைவர்
யோ. கஜேந்திரா
சிவநெறி அறப்பணி மன்றம்
கல்முனை
பதிவு.இல: AM/04104





